| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| ந. லதா,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை–600 006. | 1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், டி.பி.ஐ. வளாகம், சென்னை – 600 006.<br>2. இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6. |

ந.க.எண். 017793 /பி1/2023 நாள் :11.11.2024

ஐயா,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு – பகுதி I–ல் தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிற மொழிப்பாடம் தேர்வெழுத தகுதியான மாணவ / மாணவியர்களின் விவரம் அனுப்பி வைக்கக் கோருதல் – சார்பு

பார்வை :

1. தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம்–2006 –தமிழ்நாடு அரசிதழ் எண்.136, நாள்.12.06.2006
2. சென்னை–6, தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.18640/எப்1/06, நாள்.17.06.2006.
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.72716/சி5/இ2/2014, நாள்.03.06.2014.
4. அரசாணை (நிலை) எண்.232, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள்.08.11.2017.
5. அரசாணை (நிலை) எண்.37, பள்ளிக் கல்வி (கஆப) துறை, நாள்.06.03.2018.
6. அரசாணை (நிலை) எண்.42, பள்ளிக்கல்வித் (கஆப) துறை, நாள் 13.02.2024,

******

பார்வை 1–ல் காணும் அரசிதழ் மற்றும் பார்வை 2 மற்றும் 3–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படியும், மார்ச் 2016 முதல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் பகுதி I–ல் தமிழ் மொழி கட்டாயம் முதல் மொழிப் பாடமாகக் கொண்டு தேர்வெழுதும் முறை நடைமுறைபடுத்தப்பட்டது.

எனவே, பார்வை–1–ல் காணும் அரசிதழ் அடிப்படையில் நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் பள்ளி மாணவர்கள் பகுதி I–ல் தமிழ் மொழிப்பாடம் கட்டாயமாக தேர்வெழுதும் வகையில், மாணாக்கரது பெயர்பட்டியல் (Nominal Roll) தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 4–ல் காணும் அரசாணை படி "அயல் மாநிலங்களிலிருந்து வேலை நிமித்தமாகவோ அல்லது பணி மாறுதலிலோ 9 அல்லது 10 ஆம் வகுப்பில் தமிழை தாய்மொழியாக கொண்டிராத மாணவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேரும் மாணவர்களுக்கு மட்டும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி I–ன் கீழ் தமிழ் மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்களிக்க பள்ளிக்கல்வி இயக்குநர் / மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோருக்கு அனுமதியளித்தும்"

பார்வை 5–ல் காணும் அரசாணையின்படி "தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பிற பாடத்திட்டங்களில் பயின்று 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் மாநிலப் பாடத்திட்டத்தில் சேரும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் பகுதி I–ல் தமிழ் மொழி பாடம் எழுதுவதிலிருந்து 2023–24ம் கல்வியாண்டு வரையில் விலக்களித்து" ஆணை வெளியிடப்பட்டது.

மேலும், பார்வை 6–ல் காணும் அரசாணையில் விருப்பமொழிப் பாடத்தில் தேர்வெழுதும் மாணவர்கள் விருப்ப மொழிப்பாடத்தில் தேர்ச்சி பெற குறும அளவு 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறவேடும் என நிர்ணயம் செய்து மதிப்பெண் விவரத்தினை சான்றிதழில் குறிப்பிடலாம் எனவும், அதனை 2024–2025–ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மார்ச்/ஏப்ரல்– 2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு, பகுதி I–ல் பார்வை 4–ல் காணும் அரசாணையின்படி, தமிழ் மொழிப்பாடம் அல்லாத பிறமொழிப்பாடம் தேர்வெழுத தகுதியான மாணாக்கர்களின் விவரங்களை இணைப்பில் காணும் பட்டியலின்படி பள்ளிகளிலிருந்து பெற்று **04.12.2024–க்குள்** மின்னஞ்சல் (b1sectiondge@gmail.com) மற்றும் கடிதம் மூலமாகவும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், தங்களால் பரிந்துரைக்கப்படும் மாணவர்களுக்கு மட்டுமே பகுதி–I மொழிப்பாடத்தில் தமிழ் பாடம் விலக்கு அளிக்கப்பட்டு, பிற மொழிப்பாடத்தில் தேர்வெழுத அனுமதிக்கப்படும் என்பதனால், அரசாணைகளில் குறிப்பிட்டுள்ளபடி தகுதியுள்ள மாணவர்களின் பட்டியலை தங்களின் மேற்பார்வையில் தயாரித்து வழங்கிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**// இது மிகவும் அவசரம் //**

**இணைப்பு :–**

பட்டியல்

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

<u>பட்டியல்</u>

| வ. எண் | கல்வி மாவட்ட எண் மற்றும் பெயர் | பள்ளி எண் (DGE CODE) மற்றும் பெயர் | UDISE CODE | மாணவர் / மாணவியரின் பெயர் | மாணவர் / மாணவியரின் EMIS NUMBER | தாய் மொழி | ஏற்கனவே பயின்ற மாநிலம் / வாரியம் | தற்போது பயிலும் பள்ளியில் சேர்ந்த வகுப்பு | 2025, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி I–ல் தேர்வெழுதவுள்ள பிற மொழிப்பாடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |